**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.274 /2024 நாள்- 08.06.2026

**<u>வா.சா.2. ராமசுப்பு</u>**

**<u>குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நிரூபணவாக்குமூலம் தயார் செய்வதற்கு நான் தான் தகவல் கூறினேன். என்னை சாட்சியம் அளிக்க வாதி தான் அழைத்து வந்தார். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1-ல் நான் 1 கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.1 – ஒரு பக்கம் உள்ள ஆவணம் ஆகும். வெள்ளைத்துரை என்பவர் கையொப்பம் செய்தார். வாதி என் முன்பாகத் தான் பணம் கொடுத்தார். எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1- ஐ யார் எழுதினார் என்று கேட்டால் பத்திர எழுத்தர் ஞானகுரு எழுதினார். கடனுறுதிசீட்டு என்ன கலரில் இருந்தது என்று கேட்டால் இளமஞ்சள் கலரில் இருந்தது. வா.சா.ஆ.1 – ல்வெள்ளைத்துரை என்பவர் கையொப்பம் செய்தார் வேறு யார் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 -ல் நான் 2வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்றும் பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றும் நான் வாதி அழைத்ததன் பெயரில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.